# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**விசாரணை நாள். 13.07.2026**

**ஆணை நாள். 21.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 13438/D/2024**

திரு S.மதன்குமார் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
அயற்கண்காணிப்பாளர்,
கன்னியாகுமரி மாவட்ட
திருக்கோயில்கள்,
சுசீந்திரம்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 704. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 18.07.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 19.08.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.10.2024 |

******

**ஆணை**

இன்று 13.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு S.மதன்குமார் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி ஆ.கோமதி, அயற்கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம் - 629 704 அவர்கள் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 18.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்கா,

வேளிமலை வருவாய் கிராமம், பட்டா எண்.982, புல எண்.419/1 மனுதாரரின் சொத்தினை கண்டன் சாஸ்தா கோவில் நிலம் என்று இணையதளம் மூலம் I.T.M.S தரவு தளத்தில் தவறுதலாக அடையாள எண்.TM 038575 என்று எண் இட்டு பதிவேற்றம் செய்யவில்லை என்றும், மனுதாரரின் நிலம் கண்டன் சாஸ்தா நிலம் என்று வகைப்படுத்தி இணையதள வாயிலாக I.T.M.S தரவு தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான தரவுகள் விவரம் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், இணை ஆணையர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம் - 629 704 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 19.08.2024 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 14.10.2024 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் 66 வயது முதியவர் என்றும், S.T.Hindu College ல் முன்னாள் பேராசிரியராகப் பணிபுரிந்ததாகவும், தான் கோரிய கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்கா, வேளிமலை வருவாய் கிராமம், பட்டா எண்.982, புல எண்.419/1 நிலம் தனது ஐந்து தலைமுறை சொத்து என்றும், கடந்த 2022 - 23 ஆண்டு தனது சொத்தினை தனது மகள் திருமணத்திற்கு விற்பனை செய்ய முயன்ற போது தான், தனக்கு சொந்தமான பட்டா நிலம் தவறுதலாக அருள்மிகு கண்டன் சாஸ்தா திருக்கோயிலுக்கு சொந்தமான நிலம் என்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது தெரியவந்ததாகவும், அதனையறிந்து மிகுந்த மனவேதனை அடைந்ததாகவும், இணையத்தளத்தில் தனது நிலத்தினை கோயில் நிலம் என I.T.M.S தரவு தளத்தில் பதிவேற்றம் செய்ததை நீக்கக்கோரி பல்வேறு மனுக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகம், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் போன்ற பல்வேறு அரசு அலுவலகங்களில் அளித்துள்ளதாகவும், அம்மனுவின்பேரில் பத்மனாபுரம் வருவாய் கோட்டாட்சியரின் கடித எண்.ந.க.ஆ5/5682/2023, நாள்.02.02.2024 தேதியிட்ட கடிதத்தில் கல்குளம் வட்டம், வேளிமலை கிராமம், புல எண்.419/1 ஆனது கோயில் நிலம் தடை செய்யப்பட்டுள்ளது என கணிணி பட்டாவில் பதிவாகியுள்ளதை நீக்க கோரிய மனு தொடர்பாக தடையில்லா சான்று கேட்டு பத்மனாபபுரம் வருவாய் கோட்டாட்சியரின் கடித நாள்.12.10.2023, 20.12.2023 ன்படி இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதில் பதில் கடிதம் நாளது வரை கிடைக்கப்பெறவில்லை எனவும், கல்குளம் வட்டாட்சியரது அறிக்கையில், புல எண்.419/1, 3.670 ஹெக்டேர்ஸ் பரப்பு கொண்ட நிலம், பட்டா எண்.982 ன்படி திரு.மதன்குமார், த/பெ. சிவதாணுபிள்ளை மற்றும் 10 நபர்களின் பெயரில் கிராம கணக்கில் உள்ளதாகவும், அடங்கல் செட்டில்மெண்ட் “அ” பதிவேடு மற்றும் கணிணி “அ” பதிவேடுகளிலும் பட்டாதாரர் பெயர்களிலேயே உள்ளதாகவும், இப்புல எண்ணில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி புலத்தில் கோயில் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், புல எண்.419/1, 3.670 ஹெக்டேர்ஸ் பரப்பு நிலம், நில அளவை பதிவேடான “அ” பதிவேட்டிலும் (Settlement ‘A’ Register) பட்டாதாரர் பெயரிலேயே உள்ளது என்றும், கோவில் நிலம் என்ற பதிவுகள் எதுவும் இடம் பெறவில்லை என்றும், மனுதாரர் மேற்படி புலத்தில் தனக்கு உரிமைப்பட்ட ஒரு பகுதிக்கு 1432 - ம் பசலி வரை மார்ச் 2023 வரை நில வரியும் செலுத்தியுள்ளதாகவும், வில்லங்க சான்றினை பரிசீலனை செய்ததில்,

தக்கலை சார்பதிவாளர் ஆவண எண்.1417/1998 ன்படி பாகப்பிரிவினை ஆவணம் மூலம் மேற்படி நிலம் தனக்கு கிடைக்கப்பெற்றதாகவும், எனவே, புல எண்.419/1, 3.670 ஹெக்டேர் நிலம் "கோவில் நிலம்" தடை செய்யப்பட்டுள்ளது என பதிவாகி உள்ளதை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று பத்மனாபபுரம் வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்துள்ளதாகவும், மேலும், நாகர்கோவில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையரின் கடிதம் ந.க.எண்.4753/2023/அ3, நாள்.30.05.2024 ன்பேரில் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்கா, வேளிமலை வருவாய் கிராமம், புல எண்.419/1 ஆனது இணைய வழியில் கோவில் நிலம் என தடை செய்யப்பட்டுள்ளதை நீக்கிட தடையின்மைச் சான்று வழங்க 12.08.2024 ல் உத்தரவிட்டுள்ளதாகவும், இதனால் தனது மகளின் திருமணம் தடைப்பட்டு மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியதாகவும், 1 வருடம், 3 மாதங்கள், 8 நாட்கள் கழித்து இதுநாள் வரையில், தனக்கு முழுமையான தகவல்களை வழங்காத பொது அதிகார அமைப்புக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)இன்படி தண்டமும், பிரிவு 20(2)இன் படி துறை வாரியான நடவடிக்கை எடுக்க அரசிற்கு பரிந்துறைக்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும் மனுதாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்திய காரணத்தால், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பிரிவு 19(8)(b)-இன் படி இழப்பீடு தொகை பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், தனி வட்டாட்சியர் நியமித்த பிறகு கோவில் நிலங்களை சர்வே செய்தபோது, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்கா, வேளிமலை வருவாய் கிராமம், பட்டா எண்.982, புல எண்.419/1 நிலம் அருள்மிகு கண்டன் சாஸ்தா திருக்கோவிலுக்கு அருகில் உள்ளதாகவும், சந்தேகம் உள்ள நிலங்களை சர்வே செய்தபோது கோவில் நிலத்திற்கு அருகில் உள்ள நிலங்கள் சர்வே செய்யப்பட்டதாகவும், சர்வே செய்தபிறகு தான் தவறுதலாக மனுதாரரின் நிலம் "கோவில் நிலம்" என்று இணையத்தில் உள்ள I.T.M.S தரவு தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவித்து, சற்றேறக்குறைய 2 ஆண்டுகள் கழித்து ஏற்கனவே ந.க.எண்.13438/2024, 28.01.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முறையான, முழுமையான தகவல் வழங்காமல் இருந்த, திரு P.முருகன், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், அயற்கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 14.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது***

- மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத ஒரு பொது அதிகார அமைப்பின் அயற்கண்காணிப்பாளர் பொறுப்பில் இருக்கும் உயர் அதிகாரி தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 இன் படி மனுதாரரின் மனு பெறப்பட்டு 2 ஆண்டு காலம் ஆகியும் மனுதாரருக்கு இதுநாள் வரையில் முழுமையான தகவல்களை வழங்காமல் இருந்த 18.07.2024 நாளன்று பொதுத் தகவல் அலுவலராக இருந்த தகவல் அலுவலர் / அயற்கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மேல் கிஞ்சிற்றும் அக்கறை இல்லாமல், வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலற்ற நிர்வாகத்திற்கு வழிவகுக்கும் இந்த சட்டத்தினை மதிக்காமல் செயல்பட்ட பொது அதிகார அமைப்பினை இவ்வாணையம் வன்மையாக கண்டிக்கிறது.
- மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, அனுமதித்திருக்கும் 30 நாட்களில் பொதுத் தகவல் அலுவலர், தகவல் தர இயலாத சூழ்நிலைக்கு தகுந்த காரண விளக்கங்கள் (Violation of the Act) இவ்வாணையத்தின் விசாரணையில் தெரிவிக்காத காரணத்தாலும் அல்லது
- பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்காமல் இருப்பதற்கு ஏற்புடைய அல்லது நியாயமற்ற தாமதத்தை (Unreasonable delay) இவ்வாணையத்தின் விசாரணையில் நிரூபிக்காத காரணத்தால் அல்லது
- பொதுத்தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 இன் கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்காமல் தவறான மற்றும் திசைதிருப்பும் நோக்கில் தகவல் வழங்கியுள்ளதால் அல்லது (Providing False and Misleading information / Incomplete Information)
- பொதுத்தகவல் அலுவலரால் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற தொந்தரவு மற்றும் தேவையற்ற சிரமத்தினால் (Harrasment of Unnecessary inconvenience caused) மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் உடல் பாதிப்பினால் தன்னுடைய குடும்பம் மற்றும் தனது வருமானம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினாலும்
- மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.10,000 /- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கவும். மனுதாரர் தொகையினை மேற்படி பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு 14.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.
- மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை வழங்கும் நோக்கில், திருமதி.ஜான்சிராணி, இணை ஆணையர், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)-இன் கீழ் 1. அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் 2. அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, எந்த ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரின் நிலம் அருள்மிகு கண்டன் சாஸ்தா திருக்கோவில் நிலம் என்று வகைப்படுத்தி இணையதள வாயிலாக I.T.M.S தரவு தளத்தில் பதிவேற்றம்

*செய்யப்பட்டது என்பது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, மனுதாரர் ஒரு மூத்த குடிமகன் என்பதை கவனத்தில் கொண்டு உடனடியாக மனுதாரருக்கு உரிய தகவல்களை ஒவ்வொரு பக்கத்திலும் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரம், இணை ஆணையரின் விசாரணை அறிக்கை நகல் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 14.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு 1. தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் மற்றும் 2. தற்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.*

ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

**வழக்கு எண்.SA 13438/D/2024**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
அயற்கண்காணிப்பாளர்,
கன்னியாகுமரி மாவட்ட
திருக்கோயில்கள்,
சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம் - 629 704.

**உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு:**

இணை ஆணையர்,
கன்னியாகுமரி மாவட்ட
திருக்கோயில்கள்,
சுசீந்திரம்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 704.

**மனுதாரர்**

திரு S.மதன்குமார்,
த/பெ. திரு M.சிவதாணுபிள்ளை,
க.எண்.17-232/4, முட்டக்காடு
குமாரபுரம் அஞ்சல்,
கல்குளம் தாலுக்கா,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 164.

*Copy to: File*
***VP / PA***